**முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : திருமதி. ஏ. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.
முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.56/2019–ல் இ.ம.எண் 109/2021**

திருமதி. காளியம்மாள்

.. மனுதாரர்/1 ம் பிரதிவாதி

/ எ தி ர் /

01. திருமதி. கமலம்
02. திரு. தண்டபாணி
03. திரு. கணேசன்
04. திரு. தாமோதரன்
05. திரு. வெள்ளையம்மாள்
06. திரு. மனோகரன் என்ற மயில்சாமி

..1 to 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

07. திரு. சங்கப்பிள்ளை
08. திரு. கந்தசாமி
09. திருமதி. சரசு
10. திருமதி. முத்துக்கண்ணு என்ற முத்தம்மாள்
11. திருமதி. பாக்கியம்
12. திருமதி. சுந்தரம் என்ற சுந்தரம்மாள்
13. திருமதி. நாச்சம்மாள் என்ற ராஜம்மாள்

.. 7 to 13 எதிர்மனுதாரர்கள்/
2 to 8 பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 17.4.2024 ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P.ஜீவரத்தினம் அவர்களும், 7 முதல் 13 ம் எதிர்மனுதாரர்கள்/2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்

திரு. T. சிவசிதம்பரம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அழைத்தும் ஆஜராகததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும் மனு, உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடெவிட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக . அசல் வழக்கு எண்.56/2019 Section 11, 47 and Order 21, Rule 101 of C.P.C.–ன்படி barred by law என்பதாலும், Art–58 of Limitation Act படி barred by law என்பதாலும், re litigation and suppression of material facts and abuse of process of Court என்பதாலும் தாவா பிராதை நீக்கரவு செய்ய உத்திரவிடக் கோரி உ.வி.மு.ச. கட்டளை 7 விதி 11(d) மற்றும் பிரிவு 151 கீழ் முன்னிடப்பட்டுள்ள மனு,

2. **மனுவிற்கு ஆதரவாக மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடெவிட் சங்கதிகள் சுருக்கம் :–**

(அ) மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. வழக்குச் சொத்துக்கள் 1 முதல் 6 எதிர்மனுதாரர்களான வாதிகளுக்குப் பாத்தியப்பட்டதென்று

விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி அசல் வழக்கு 56/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1,5,6 வாதிகள் 4 முதல் 8 பிரதிவாதிகளின் சகோதரிகள். 2 மற்றும் 3 வாதிகள் 2ம் பிரதிவாதியின் சகோதரர். 4ம் வாதி 3ம் பிரதிவாதியின் கிரையதாரர். வழக்குச் சொத்து ஆதியில் 1ம் பிரதிவாதியின் தாயார் மாரியாயி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து 2, 3, 4 முதல் 8 பிரதிவாதிகள் மற்றும் 1ம் வாதியின் தாயார் லேட் சீரங்கம்மாள் மீது 4/15 பாகம் கேட்டு அசல் வழக்கு எண் 250/2000 வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 6.12.2001ல் ஏற்பட்ட முதல்நிலைத் தீர்ப்பாணையின்படி இ.ம.எண் 251/2005-ல் இறுதிநிலைத் தீர்ப்பாணை 29.11.2017ல் பிறப்பிக்கப்பட்டது. அதன்படி நிறைவேற்றுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 29.3.2019ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு மாரியாயின் பாகச் சொத்து சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல்நிலைத் தீர்ப்பாணைக்கு எதிராக 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் மேல்முறையீடு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக் கோரும் இ.ம.எண் 355/2007 மனுவானது 11.10.2013ல் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவிற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு கீழமை நீதிமன்ற இடைமனு உத்தரவை உறுதி செய்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் 3ம் பிரதிவாதியிடம் 4ம் வாதி 13.3.2009ல் ஒரு பகுதியை கிரையம் பெற்றதாகவும், 4 முதல் 8

பிரதிவாதிகளிடம் 5 மற்றும் 6 வாதிகள் 18.10.2007ம் தேதியில் ஒரு பகுதியை கிரையம் பெற்றதாகவும் ஆவணங்கள் உற்பத்தி செய்து பொய்யாக இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.அ.வ.எண் 250/2000ல் ஏற்பட்ட தீர்ப்பு இறுதியானது. அதன்பேரில் மேல்முறையீடு ஏதுமில்லை. எனவே, உவி முச பிரிவு 11–ன் கீழ் முன்தீர்ப்புத் தடை என்ற கோட்பாட்டின் கீழ் பிராது நிராகரிக்கப்படவேண்டும்.

ஆ) 4ம் வாதி 13.3.2009ல் உற்பத்தி செய்த கிரைய ஆவணத்தை வைத்துக்கொண்டு உவிமுச பிரிவு 47–ன் கீழ் தாக்கல் செய்ய உரிமை கோரும் மனு E.P. 11/2018 தள்ளுபடியானதன் பேரில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CRP (MD) No. 931 of 2019 (NPD) and CMP (MD) No. 5326 of 2019 தாக்கல் செய்யப்பட்டு அதனை 4ம் வாதி மேல் நடத்தாமல் (not pressed) 27.8.2019 அன்று தள்ளுபடிக்கு விட்டுள்ளார். எனவே, 4ம் வாதி தாவாச் சொத்தின் பேரில் உரிமை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்ய தடைபட்டுள்ளதால், முன்தீர்ப்புத் தடை என்ற கோட்பாட்டின் கீழ் பிராது நிராகரிக்கப்படவேண்டும்.

இ) வழக்குச் சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒப்படைக்கப்பட்ட பின் வாதிகளுக்கு ஆட்சேபணை இருந்தால் உவிமுச பிரி வு 47 அல்லது கட்டளை 21 விதி 101–ன் கீழ் E,P. 11/2018ல் மனு தாக்கல் செய்யமுடியுமேயொழிய மீண்டும் இந்த வழக்கினை தாக்கல் செய்ய

சட்டப்படி உரிமையில்லை. உவிமுச பிரிவு 47 மற்றும் கட்டளை 21 விதி 101–ன்படி barred by law என்பதால் இவ்வழக்கு நிராகரிக்கப்படத்தக்கது. அசல் வழக்கு எண் 250/2000–ல் 14.11.2009 அன்று நீதிமன்ற ஆணையர் தாவாச் சொத்தைப் பார்வையிட்டபோது வாதிகளுக்கு முதல்நிலைத் தீர்ப்பாணையின்படி சொத்தில் பாத்தியமில்லை என்பதை தெரிந்து கொண்டு பிராதிலும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேற்படி 14.11.2009 ம் தேதியிலிருந்து 3 ஆண்டு காலத்திற்குள் வாதிகள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும். எனவே, காலவரையறைச் சட்டம் Article 58 ன்படி barred by law எ ன்பதால் இவ்வழக்கு நிராகரிக்கத்தக்கது. தாவாச் சொத்தின் பேரில் ஏற்கனவே இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு நி.மஎண் 11/2018 ல் இறுதி தீர்வு காணப்பட்டு சொத்து மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மீண்டும் புதிய வழக்கு தாக்கல் செய்திருப்பதால் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே பிராது நிராகரிக்கப்படவேண்டும்.

ஈ) தாவாச் சொத்து மனுதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதை ஒப்புக்கொள்ளும் வாதிகள் மற்றொரு வழக்கு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண் 108/2019 தாக்கல் செய்து பாகம் கோரியிருப்பதும் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே, அசல் வழக்கு 56/2019 முன்தீர்ப்புத் தடை, barred by law, Article 58 of Limitation Act ஆகியவற்றின்படி நிராகரித்து உத்தரவிடப்படவேண்டும்.

3) **<u>2 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரைச் சுருக்கம்:–</u>**

1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி . மனுச் சங்கதிகள் முற்றிலும் மறுக்கப்படுகின்றன. அசல் வழக்கு 250/2000ல் ஏற்பட்ட தீர்ப்பு கூட்டுச் சேர்ந்து பெறப்பட்டுள்ளது. உபயவாதிகள் கூட்டுச் சேர்ந்து பொய்யாகப் பெறப்படும் தீர்ப்பு ரத்துச் செய்யப்படத்தக்கது. கூட்டுச் சேர்ந்து பொய்யாகப் பெறப்படும் தீர்ப்பின் பேரில் அடையக்கூடிய பயன்கள் திரும்பப் பெறத்தக்கது. அதை ஒரு இறுதி முடிவாக கருதமுடியாது. விரிவாகவும் முழுமையாகவும் விசாரணை மேற்கொள்வதற்காக பிராதுரை சங்கதிகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கூட்டு சதியின் பேரில் பெறப்பட்ட தீர்ப்பினை அங்கீகாரம் பெறுவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கின் முழுவிசாரணையில்தான் மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டும்.வா.சா.1 விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ள நிலையில் வழக்கின் நடவடிக்களை வேண்டுமென்றே தடை ஏற்படுத்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

5) இரு தரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் ஏதுமில்லை.

6) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அசல் வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத் க்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 1,2,3,5,6 வாதிகள் 2 முதல் 8 பிரதிவாதிகளின் சகோதர சகோதரிகள் என்றும், 4ம் வாதி 3ம் பிரதிவாதியின் கிரையதாரர் என்றும், ஆதியில் 1ம் பிரதிவாதியின் தாயார் மாரியாயி என்பவருக்கு வழக்குச் சொத்து பாத்தியப்பட்டிருந்து 2,3,4 முதல் 8 பிரதிவாதிகள் மற்றும் 1ம் வாதியின் தாயார் சீரங்கம்மாள் ஆகியோர் மீது பாகப்பிரிவினை வழக்கு அ.வ. எண் 250./000 தாக்கல் செய்யப்பட்டு அதில் இறுதிநிலைத் தீர்ப்பாணை மற்றும் நிறைவேற்றுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 29.3.2019ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு அவரது தாயார் மாரியாயின் பாகச் சொத்தாக சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவும், அந்த தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு காலதாமத மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் பாகப்பிரிவினை தீர்ப்புஇறுதியானது என்றும் அந்த வகையில் இந்த அசல் வழக்கை உவிமுச பிரிவு 11–ன் கீழ் தாக்கல் செய்ய முன்தீர்ப்புத் தடை உள்ளதாகவும், 4ம்வாதி 13.3.2009ல் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையம் உற்பத்தி செய்யப்பட்டது என்றும், உவிமுச பிரிவு 47–ன் கீழ் உரிமை கோரப்பட்ட நி.ம.எண் 11/2018 தள்ளுபடி செய்யப்பட்டு அதன் பேரில் ஏற்பட்ட சீராய்வு மனுவும் தள்ளுபடிக்கு விடப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டதால் முன்தீர்ப்புத் தடை என்ற வகையில் வழக்கு நிராகரிக்கப்படவேண்டுமென்றும், பாகப்பிரிவினை வழக்கில்

இறுதியாக 14.11.2009–ல் தீர்ப்பு ஏற்பட்டதிலிருந்து 3 ஆண்டு காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படாததால் காலவரையறைச் சட்டம் ஆர்டிக்கள் 58 ன்படி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தாவாச் சொத்து மனுதாரருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதை ஒப்புக்கொள்ளும் வாதிகள் மீண்டும் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிடப்பட்டது.

7) எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது பாகப்பிரிவினை வழக்கு தரப்பினர்களால் கூட்டுச் சேர்ந்து தீர்ப்பு பெறப்பட்டுள்ளதாகவும், அந்த தீர்ப்பு இறுதி முடிவாக கருத முடியாது என்றும், இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ள நிலையில் வழக்கின் நடவடிக்கைகளை வேண்டுமென்றே தடை செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுளள்தாகவும் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டு தனது தரப்பு வாதத்திற்கு ஆதரவாக கீழ்க்கண்ட முன்தீர்முடிவுகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

8) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன.

9) தாவாச் சொத்தின் பேரில் பொன்னாக் கவுண்டர் மற்றும் மயிலைக் கவுண்டரின் வாரிசுகளான 1 முதல் 3 வாதிகள் மற்றும் கிரையதாரர்களான 4 முதல் 6 வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப்

பரிகாரம் கோரி அசல் வழக்கு எண் 56/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதர வாரிசுதாரர்களான பிரதிவாதிகளில் 1ம் பிரதிவாதி மட்டும் இம்மனுவினை தாக்கல் செய்து ஏற்கனவே வழக்கு சம்மந்தப்பட்ட பிரச்சனை முன் தீர்ப்பு ஏற்பட்டு முடிவுற்றிருப்பதால் முன்தீர்ப்புத் தடை என்ற காரணத்தின் பேரிலும், காலவரையறைச் சட்டம் Article 58 ன்படியும் வழக்கு நிராகரிக்கப்படவேண்டுமென்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிடைச் சொத்தைப் பொறுத்து ஏற்கனவே வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்அசல் வழக்கு எண் 250/2000-ல் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதாகச் சொல்லப்படும் 1ம் பிரதிவாதியின் தாயார் மாரியாயி என்பதாகவும், ஆனால் 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் மாரியம்மாள் என்பதாகவும் பிராதுரையில் குறிப்பிட்டு தரப்பினர்கள் கூட்டுச் சேர்ந்து கொண்டு பொய்யாக அவ்வழக்கை தாக்கல் செய்து இறுதிநிலைத் தீர்ப்பாணை பெற்று ஒப்படைப்பு பெற்றுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இது குறித்து அசல் வழக்கில் முழு விசாரணையின்போதுதான் உண்மை விவரங்களை கண்டறிய இயலும்.

10) மேலும், அசல் வழக்கு 56/2019 ல் கட்டுப்பட்ட தாவாச் சொத்தின் பேரில் விளம்புகை பரிகாரத்திற்காக வாதிகளின் பாத்தியதை குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை வைத்து விரிவாக ஆராயப்படும்போதுதான் உண்மைத் தன்மை புலப்படும். அந்த வகையில்

இந்த அசல் வழக்கானது முழு விசாரணை மேற்கொள்ளப்படவேண்டியதும் அவசியமாகின்றது. முன்தீர்ப்புத் தடை என்பது குறித்து பரிசீலிக்கும்போது குறிப்பாக முந்தைய வழக்கின் தரப்பினர்கள் மற்றும் இவ்வழக்கின் தரப்பினர்கள் ஒன்றாக இருப்பதாக அறிய முடியவில்லை. மேலும், 4 முதல் 6 வாதிகள் கிரையதாரர்களாக இவ்வழக்கில் குறிப்பிட்டு சேர்க்கப்பட்டுள்ளார் கள். அவர்கள் பெற்ற கிரைய ஆவணத்தைப் பொறுத்து செல்லத்தக்கதல்ல என்பதாக எடுத்துரைக்கப்படும் வாதம் குறித்தும் அசல் வழக்கில்தான் இறுதியாக தீர்மானிக்க இயலும். மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 250/2000-ல் ஏற்பட்ட தீர்ப்பு இறுதி முடிவாக கருத முடியாது என்றும், விரிவாகவும் முழுமையாகவும் விசாரணை மேற்கொள்வதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், வழக்குச் சொத்தின் பேரில் கூட்டு சதி செய்து பெறப்பட்ட இறுதிநிலைத் தீர்ப்பாணையினை அங்கீகாரம் பெற இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், வழக்கு நடவடிக்களை தடை ஏற்படுத்த மனுதாரர் முற்படுவதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை பரிசீலிக்கும்போது இவ்வழக்கு வா.சா.1ன் விசாரணைக்காக நிலுவையில் இருப்பதை அறிய முடிகின்றது. அத்துடன் முன்தீர்ப்புத் தடை என்ற வாதத்தைப் பொறுத்து மேற்சொன்ன பத்திகளில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

11) மேலும், காலஞ்சென்ற பொன்னாக் கவுண்டர் மற்றும் மயிலக் கவுண்டரின் வாரிசுகள் தங்கள் இதர பாகஸ்தர்கள் மீது அசல் வழக்கு எண் 108/2019 தாக்கல் செய்து அதில் இதே வழக்குச் சொத்தின் பேரில் பாகப்பிரிவினை, சுவாதீனம் மற்றும் இழப்பீடு பரிகாரங்கள் கோரி , அந்த வழக்கும் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. மேற்சொன்ன வழக்கிலும் அசல் வழக்கினை நீக்கரவு செய்யக்கோரி இதே 1ம் பிரதிவாதி காளியம்மாள் இ.மஎண் 110/2021 தாக்கல் செய்துள்ளார். இத்தகைய சூழ்நிலையில் இம்மனுவில் பேரில் தாவாச் சொத்தின் பேரிலான வழக்கு முன் தீர்ப்புத் தடையால் பாதிக்கப்பட்டுளள்தாகவோ, கால வரையறை சட்டத்தின் கீழ் நிலைக்கத்தக்கதல்ல என்பதாகவோ, உவிமுச பிரிவு 47–ன் கீழ் சட்ட ரீதியாக தடைபட்டுள்ளதாகவோ (barred by law) கருத இயலாது. எனவே, மேலே ஆராய்ந்த வகையில், இம்மனுவில் மனுதாரர் கோருவது போன்று அசல் வழக்கு 56/2019 பிராதுரை சங்கதிகளின் அடிப்படையில் முழு விசாரணை மேற்கொண்டு இறுதி தீர்வு காணப்படவேண்டியது அவசியமானதென்றும், அந்த வகையில் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

12) இறுதியில் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2024–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.05.08 14:06:44 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

இரு தரப்பிலும் சாட்சிய, சான்றாவணம் : இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.05.08 14:07:27 +0530

மு மா நீ.,
திண்டுக்கல்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
அ.வ.எண் 56/2019–ல்
இ.ம. எண் 109/2021
அசல்/நகல் உத்தரவு
நாள் : 30.04.2024